செ.வெ. எண்: 120 நாள்: 09.02.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 4.2.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலளித்துப் பேசுகையில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு 8.11.2011, 18.11.2011 மற்றும் 15.12.2011 ஆகிய நாட்களில் நடத்திய கூட்டங்களின் போது எழுப்பப்பட்ட பல்வேறு சந்தேகங்கள் / வினாக்களுக்கு பதிலளித்ததோடு கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது என்பது குறித்த 77 பக்க அறிக்கையையும் அளித்தது எனவும், 31.1.2012 அன்று நடைபெற்ற இந்த வல்லுநர் குழுவின் கடைசிக் கூட்டத்தில் இந்த வல்லுநர் குழு, மேலும் ஒரு அறிக்கையை அளித்ததுடன், இக்குழுவின் பணி முடிவுற்றதாக அறிவித்துள்ளது என்றும் தெரிவித்து, கூடங்குளம் அணுமின் நிலைய பாதுகாப்பு குறித்தும்; அப்பகுதி மக்களிடையே இது குறித்து தற்போது நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்தும் அறிந்து, மாநில அரசுக்கு விரைந்து அறிக்கை அளிக்கும் வகையில், மாநில அரசால் ஒரு வல்லுநர் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

i) பேராசிரியர் எம்.ஆர். சீனிவாசன்
(முன்னாள் தலைவர், அணுமின் சக்தி கழகம்)
கோத்தகிரி, நீலகிரி.

ii) டாக்டர் டி. அறிவு ஒளி,
பேராசிரியர், இயற்பியல் துறை, அண்ணா பல்கலைக்கழகம்.

iii) டாக்டர் எஸ். இனியன்,
பேராசிரியர் மற்றும் இயக்குநர், எரிசக்தி ஆய்வு மையம்,
அண்ணா பல்கலைக்கழகம்.

iv) திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப. (ஒய்வு)
தலைமைச் செயலர் நிலையில் ஒய்வு பெற்ற அதிகாரி.

டாக்டர் எஸ். இனியன் அவர்கள் இந்த வல்லுநர் குழுவின் அமைப்பாளராக செயல்படுவார்.

தேபேந்திரநாத் சாரங்கி,
தலைமைச் செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 9.2.2012